PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Nada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@orgroup.org

தெலங்கானாவில் டிசம்பர் 11 முதல் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி: இலச்சினை, சின்னம் ஆகியவற்றை வெளியிட்டார் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா



சென்னை – 16 நவம்பர், 2026 தெலங்கானாவில் டிசம்பர் 11 முதல் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி: இலச்சினை, சின்னம் ஆகியவற்றை வெளியிட்டார் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா.

8-வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிக்கான இலச்சினை, சின்னம் ஆகியவற்றை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, தெலங்கானா முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி ஆகியோர் தில்லியில் இன்று (15.11.2026) அறிமுகப்படுத்தினர். இப்போட்டி 2026 டிசம்பர் 11 முதல் 22-ம் தேதி வரை தெலங்கானாவில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய மன்சுக் மாண்டவியா, இளைஞர்களை விளையாட்டுகளில் அதிகம் ஈடுபடுத்த வேண்டும் என்ற முனைப்புடன் பிரதமர் நரேந்திர மோடி செயல்படுவதாக கூறினார். விளையாட்டுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இளைஞர்களை ஊக்குவிக்க தேசிய விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள், குளிர்கால விளையாட்டுகள், பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் போன்றவை நடத்தப்படுவதாகவும் மன்சுக் மாண்டவியா கூறினார்.

தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி பேசுகையில், இத்தகைய போட்டிகள் போதைப் பழக்கத்திலிருந்து இளைஞர்களை விடுவித்து, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க உதவும் என்று கூறினார்.

2026 டிசம்பர் 11-ல் தொடங்கும் 8-வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி, ஹைதராபாத், கம்மம், கரீம்நகர், ஹனுமகொண்டா, மகபூப்நகர், நிஜாமாபாத் ஆகிய 6 நகரங்களில் நடைபெற உள்ளன. சுமார் 8,000 வீரர்கள் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் 29 விளையாட்டுப் பிரிவுகள் இதில் இடம்பெறும்.